# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.1031/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | காளியப்பன் | க–பெ | அழகர் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 25/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | பெயிண்டர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2025**

எதிரி ஆஜர்.

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் காரைக்குடியில் வசித்து பெயிண்டராக வேலைசெய்து வருகிறேன். 2019 ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை நான் கடையில் இருந்த போது மாலை போலீசார் அங்கு வந்தார்கள். கையொப்பம் ஒன்று கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். மற்றபடி வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 2.**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதகோரி அனுமதிக்கப்பட்டு அதன்அடிப்படையில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 13.1.2019 அன்று மாலை 4.30 மணிக்கு காரைக்குடி மின்சார வாரிய அலுவலர் குடியிருப்பு சாலை அருகில் வந்து ஏற்கனவே நடந்த சாலை விபத்து ஒன்று குறித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.14 17:35:52 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1031/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராம்குமார் | த–பெ | சுந்தரராஜ் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 50/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | கடை வியாபாரம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2025**

எதிரி ஆஜர்.

---------------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை.**

நான் தற்போது காரைக்குடியில் வசித்து கடைவியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 11.01.2019 அன்று மதியம் 3.30 மணியளவில் நான் மின்சார வாரிய அலுவலர்கள் குடியிருப்பு எதிரே உள்ள மளிகை கடையில் நான் வேலை செய்து வந்தேன். தற்செயலாக அப்போது 50 மீ தொலைவில் உள்ள சாலையில் டமார் என்று சத்தம் கேட்டது. அங்கு சென்று பார்த்தபோது மேற்படி அலுவலக குடியிருப்பின் பின்புறமாக குடியிருந்து வந்த சின்னய்யா என்பவரை Hero Honda spelendor வாகனத்தில் வந்த நபர் அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது தெரிய வந்தது. (அந்த வாகனத்தை ஓட்டி வந்த நபரை தெரியாது). மேற்படி விபத்தில் சின்னய்யாவுக்கு வலது நெற்றி மற்றும் கால் பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. மேலும் காயம் பட்ட அவரை சிகிச்சைக்காக காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்துச் சென்றனர். போலீசார் வந்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் சம்பவ இடம் சென்றேன் என்றால் சரிதான். யார் யார்மீது மோதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியை பற்றியும் தெரியாது மேலும் எதிரியை பார்க்கவில்லை என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J
Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.14 17:35:43 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி